[வலைப்பின்னல் மாற்று முறை]

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 1999 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பிரதேச சபைகள் (திருத்தச்) சட்டம்

---

*(1999, யூன் மாதம் 15 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

1999, யூன் மாதம் 18 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப் பெற்றது.

---

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை. ரூபா 5.25 தபாற் செலவு ரூபா 3.50

**1999 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பிரதேச சபைகள் (திருத்தச்) சட்டம்**

[*1999 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ. - ஓ. 24 /95*

## 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1**. இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பிரதேச சபைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தில் 9 அ, 9ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**2**. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன வென்பதுடன், அவை அச்சட்டத்தின் முறையே 9அ , 9ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"பிரதேச சபைகளின் இடப்பரப்பு எல்லைகளை யும் உறுப்பினர் களின் எண்ணிகை யையும் வேறு படுத்துவதற்கும் பிரதேச சபையைக் கலைத்து மாற்றீடு செய்வதற்கும் அமைச்சருக்குள்ள தத்துவம்.*

**9அ**, அமைச்சரானவர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம், எந்த நேரத்திலும் -

(அ) ஏதேனும் பிரதேச சபை இடப்பரப்பு எல்லைகளை 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு ஒத்த முறை யொன்றில் வேறு படுத்தலாம் ;

(ஆ) ஏதேனும் பிரதேச சபைகளுக்கு 4 ஆம் பிரிவின் கீழ் தீர்மானிக்கப்பட்டதான உறுப்பினர்களின் எண்ணிக்கையை அப்பிரிவில் தரப்பட்டுள்ள கோட்பாடுகளுக்கு இணங்க வேறுபடுத்தலாம் ;

(இ) ஏலவேயுள்ள சபை எந்தப் பிரதேச சபை இடப்பரப்புக்காக அமைக்கப்பட்டதோ அந்தப் பிரதேச சபை இடப்பரப்பு எல்லைகளின் ஏதேனும் வேறுபடுத்துகையின் மேல், அவ்வாறு செய்வது உசிதமென அவருக்குத் தோன்றுகின்ற போதிலெல்லாம் ஏலவேயுள்ள ஏதேனும் பிரதேச சபையினைக் கலைத்து அத்தகைய ஏலவேயுள்ள சபைக்குப் பதிலாக அமைக்கப்பட வேண்டிய புதிய பிரதேச சபையினால் அது மாற்றீடு செய்யப்பட வேண்டுமெனப் பணிக்கலாம் ;

*(ஈ) ஏதேனும் பிரதேச சபையை, அவ்விடத்தில் மாநகர சபையொன்றை அல்லது நகர சபையொன்றை அமைக்கும் நோக்கத்திற்காகக் கலைக்கலாம். மாநகர சபையொன்றை அமைக்கையில், அமைச்சர் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய மாநகர சபை எந்த இடப் பரப்பிற்காக அமைக்கப்படவுள்ளதோ அந்த இடப்பரப்பின் அபிவிருத்தியையும் அல்லது பொது வசதிகளையும் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.*

*அத்துடன் நகர சபையொன்றை அமைக்கையில் அமைச்சர், நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.*

*ஆயினும், இப்பிரிவின்கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை எதுவும், அக்கட்டளையில் குறிப்பீடு செய்யப்பட்ட உளதாம் பிரதேச சபை எதனதும் உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிவடைந்ததன் பின்னர் வரை வலுவுக்கு வருதல் ஆகாது.*

*புதிய பிரதேச சபை ஏலவேயுள்ள சபையை அடுத்துறுவதாதல் வேண்டும்.*

**9 ஆ.** *எந்தப் பிரதேச சபை கலைக்கப்பட்டதோ அந்தப் பிரதேச சபை எதனதும் இடத்தில் 9அ என்னும் பிரிவின்கீழ் ஏதேனும் புதிய பிரதேச சபை அமைக்கப்படுமிடத்து–*

*(அ) எந்தப் பிரதேச சபை இடப்பரப்புக்காக அல்லது அதன் ஏதேனும் பாகத்துக்காகக் கலைக்கப்பட்ட சபையானது அமைக்கப்பட்டதோ அந்தப் பிரதேச சபை இடப் பரப்பு அல்லது அதன் ஏதேனும் பாகம் தொடர்பிலான எல்லா நோக்கங்களுக்காகவும், எந்தப் பிரதேசசபை இடப்பரப்புக்காகப் புதிய சபை அமைக்கப்பட்டதோ அந்தப் பிரதேச சபை இடப்பரப்பின் நிருவாக எல்லையினுள் அத்தகைய இடப் பரப்பு அல்லது அதன் பாகம் உள்ளடக்*

கப்படும்வரை, புதிய சபையானது அது அமைக்கப்பட்ட திகதியிலிருந்து கலைக்கப்பட்ட சபையை அடுத்துறுவதாதல் வேண்டும்;

(ஆ) புதிய சபையின் நிருவாக எல்லைகளுக்குள் அமைந்திருப்பதான அத்தகைய கலைக்கப்பட்ட சபையின் எல்லா ஆதனமும், அத்துடன் அத்தகைய கலைக்கப்பட்ட சபையின் எல்லா உரிமைகள், தத்துவங்கள், கடமைகள், தனிசுகள், பொறுப் புக்கள், கடப்பாடுகள், என்பனவும் அவை புதிய சபையின் நிருவாக எல்லைகளுக்குள்ளான ஏதேனும் இடப் பரப்பைத் தொடர்புறுத்து கின்றவரை, புதிய சபை அமைக்கப்பட்ட தேதியில் இருந்து புதிய சபைக்குக் கைமாற்றப்பட்டனவாகக் கருதப் படுதல் வேண்டும்;

(இ) ஏதேனும் சட்டவாக்கத்தில் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையிலான, விதியிலான, ஒழுங்குவிதியிலான அல்லது துணைநிலைச் சட்டத்திலான அல்லது அதனைப் பின்பற்றி நிறைவேற்றப் பட்டனவான அல்லது வழங்கப்பட்டனவான ஏதேனும் ஆவணத்தில் அல்லது சாதனத்தில் கலைக்கப்பட்ட சபை பற்றியனவான எல்லாக் குறிப்பீடுகளும் புதிய சபையின் நிருவாக எல்லைகளுக்குள் உள்ளடக் கப்பட வேண்டியதான அத்தகைய கலைக்கப்பட்ட சபை நிருவாக எல்லைகளுக் குள்ளான, ஏதேனும் இடப்பரப்பின் நோக்கத்திற்காக, அவை புதிய சபைக்கான குறிப்பீடுகள் என்றாற் போன்று பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்;

*ஒவ்வாமை ஏற்படும் படசத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*